[1992 ஜனவரி 30

8—

சிதம்பரனார் மாவட்டத்தில் புதிய போக்குவரத்துக் கழகம்.

*4933 திருமதி என். சி. கனகவல்லி:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் போக்குவரத்துக் கழகம் இருப்பதுபோல் சிதம்பரனார் மாவட்டத்திலும் புதிய போக்குவரத்துக் கழகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி என். சி. கனகவல்லி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுருக்கமாக இல்லையென்று சொல்லிவிட்டார்கள். இல்லையென்ற சொல்லுக்கே இடம் இல்லாத நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் வருகிற நிதியாண்டிலாவது இந்தத் திட்டம் கனிவோடு பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதுபாண்டியர் போக்குவரத்து கழகத்தில் 725 பேருந்துகளைத்தான் இப்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம். தில்லைநாயகம் உயர்மட்டக் குழுவானது 750 பேருந்துகளிலிருந்து 1200 பேருந்துகள் வரை இருந்தால் தான் போக்குவரத்துக் கழகத்தைச் சிறப்பாக இயக்க முடியுமென்று கருத்துரை வழங்கியுள்ளது. நம்முடைய தமிழகத்தில் ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற 60 நாட்களுக்குள்ளேயே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றைப் பிரித்து, நம்முடைய

1992 ஜனவரி 30]

மறைந்த தலைவர் புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரால் போக்குவரத்துக் கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது. கூடுதலாகப் பேருந்துகள் விடுகிறபோது இந்தப் பேருந்து கழகத்தைப் பிரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சூ. சே. இராஜமன்னார்.

திரு. சூ. சே. இராஜமன்னார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்கட்ட சுதந்திரப் போராட்ட வீரர் கட்டபொம்மனும், இரண்டாவது கட்ட சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சி.யும் பிறந்த எங்கள் மாவட்டத்திலிருந்து கட்டபொம்மனை நெல்லைக்குத் தாரை வார்த்து விட்டோம். எஞ்சியுள்ள வ.உ.சி. பெயரால், வ.உ.சி. பிறந்த இடமான ஒட்டப் பிடாரத்தைக் தலைமையிடமாகக் கொண்டு வ.உ.சி. போக்கு வரத்துக் கழகம் என்று ஒரு போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான சாத்தியகூறுகள் இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9. திரு. கே பி. ராஜூ மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

9—

கோவை மாவட்டத்தில் நூற்பாலை.

* *3923*—**திரு. கே. பி. ராஜூ**:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோவை மாவட்டத்தில் அரசு சார்பாக நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.